# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-13313/A/2023**

திரு N.M. கருணாநிதி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
மேலாளர் (வைப்புநிதி),
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
கீழ்பாக்கம், சென்னை-10. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு N.M. கருணாநிதி ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி இ.சுமித்ரா,<br>பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர் (வைப்புநிதி) நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 27.03.2023 |
| மயிலாளடுதுறை மாவட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள்முதல் உதவியாளராக 20.10.1980-ல் பணியில் சேர்ந்து, இளநிலை உதவியாளராக 28.02.2010-ல் பணிஓய்வு பெற்ற தனது சம்ளத்தில் வருங்கால வைப்பு நிதிக்கு பிடித்தம் செய்த தொகை மாதவாரியாக விவரம் தேவை என்பது போன்ற தகவல்களை 4 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | --- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 15.05.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | --- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 24.07.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், பணி மூப்புப் பட்டியலில் [Seniority List] தான் மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும், தன்னைவிட இளையவரான ஆறுமுகம் என்பவர் பணி மூப்புப் பட்டியலில் [Seniority List] பத்தாவது இடத்தில் உள்ளதாகவும், அவர் தன்னைவிட அதிகமான ஓய்வூதியம் பெறுவதாகவும், எனவேதான் ஓய்வூதிய கணக்கீடு விவரங்களை தான் கோரியுள்ளதாகவும், அத்தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறும் கோரினார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 15.09.2023, 25.09.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் மூலம் உரிய தகவல்களை பதிவஞ்சலில் அனுப்பியுள்ளதாகவும், ஒப்புகை அட்டை பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**4. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்கள் ஏற்புடையதல்ல என்று ஆணையம் கருதுகிறது. எனவே இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மூத்த குடிமகனின் ஓய்வூதியம் குறித்த கோரிக்கைகளுக்கு, ஆவணங்களின் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலர் பரிசீலனை செய்து, மனுதாரர் கோரும் இனங்களுக்கு உரிய சரியான தகவல்களை சான்றிட்டு, ஒப்புகையுடன் கூடிய பதிவஞ்சலில், பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி, மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அதுகுறித்த அறிக்கையுடன் வரும் 08.05.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு மேலாளர் (வைப்புநிதி) / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**5. பெறப்பட்ட தகவல்களில் ஏதேனும் குறைபாடு இருப்பதாக மனுதாரர் கருதினால், வரும் 08.05.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி, தனது வாதுரையை தெரிவிக்கும் படி மனுதாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-13313/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேலாளர் (வைப்புநிதி),
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
கீழ்பாக்கம், சென்னை-10.

<u>மனுதாரர்</u>

திரு N.M. கருணாநிதி,
ஜீவா நகர்,
வைத்தீஸ்வரன் கோயில் அஞ்சல்,
சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை-609 117.

Copy to: File

PR/Sr.PS 07.04.2025